
# கௌதம புத்தர்

[டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்]



Q4
N58
59714

கேஷன்ஸ் டிவிஷன்

October 1956

[உதவி ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், ஆங்கிலப் பேருரை ஒன்றில் தெரிவித்த கருத்துகளின் சுருக்கமே இப்பிரசுரம்].

விலை 1 அணா

GAUTAMA THE BUDDHA (*TAMIL*)
PRICE : ONE ANNA

# கௌதம புத்தர்

கிழக்கு உலகின் மாபெரும் ஞானி கௌதம புத்தர். மனித வர்க்கத்தின் சிந்தனையையும் வாழ்வையும் உருவாக்கியவர்களில் எவருக்கும் குறைந்தவர் அல்ல அவர். ஒரு மத சம்பிரதாயத்தைத் தோற்றுவித்தவர் என்ற முறையில் அவர் எல்லோருக்கும் புனிதமானவர். வியாபகத்திலும் ஆழத்திலும் வேறு எந்த மதத்துக்கும் குறைந்தது அல்ல அவரது மதம். உலகச் சிந்தனை சரித்திரத்தில் இடம் பெற்றவர் அவர். பண்பட்ட மனிதர்கள் அனைவருக்கும் பிதிரார்ஜிதப் பொக்கிஷம் அவர். நேர்மையான அறிவு, ஒழுக்கப்பற்று, ஆழ்ந்த ஆத்மிகத் திருஷ்டி ஆகியவற்றைக் கொண்டு அளவிட்டால், மிகப் பெரிய சரித்திர புருஷர்களில் ஒருவர் அவர் என்பதில் ஐயமில்லை.

## 1. வாழ்க்கையும் பண்பும்

அவர் கி. மு. 563-வது ஆண்டில் பிறந்தார். கபிலவாஸ்துவைச் சேர்ந்த சாக்கியர் என்ற க்ஷத்திரிய ஜாதியின் அதிபரான சுத்தோதனர் அவரது தந்தை. காசியிலிருந்து நூறு மைல் வடக்கே, நேப்பாள எல்லையில் கபிலவாஸ்து உள்ளது. அவருடைய இயற் பெயர் சித்தார்த்தர், குடும்பப் பெயர் கௌதமர். அவர் ஒன்று சக்கரவர்த்தி ஆவார்; அல்லது "புத்தர்" (ஞானி) ஆவார் என்று அவர் பிறந்த போதே புரோகிதர்கள் குறிப்பிட்டனர்.

இளமை

கௌதமர் பிறந்து ஏழு நாட்களில் தாயார் இறந்தார். அவரது சிற்றன்னையும், சுத்தோதனரின் இளைய தாரமுமான மஹாப்பிரஜாபதி அவரை வளர்த்து வந்தாள். பின்னர் முறைப்பெண்ணான யசோதரையைக் கௌதமர் மணந்து ராகுலன் என்ற மகனைப் பெற்றெடுத்தார்.

ஒரு வயோதிகன், ஒரு நோயாளி, ஒரு பரதேசி ஆகியோரையும் ஒரு பிரேதத்தையும் கௌதமர் பார்த்தாராம். சாந்தியும் உன்னதமும் வாய்ந்த மத வாழ்வை நடத்த வேண்டும் என்ற

ஆவலே இக்காட்சிகள் தூண்டிவிட்டனவாம். கௌதமர் இயல்பாகவே மத வாழ்வில் நாட்டம் கொண்டிருந்தார் என்பதையும்; லோகாயத இன்பங்களிலும் ஆசைகளிலும் அவருக்குத் திருப்தி இல்லை என்பதையும் இக்கதை காட்டுகிறது. இருபத்தியொன்பதாவது வயதில் அவர் வீட்டை விட்டு வெளியேறி, சந்நியாசிக் கோலம் புனைந்து, சத்திய சோதனையில் இறங்கினர். இதுவே அவரது மகத்தான துறவு.

துறவு

முதலில் இரு பிராமணத் துறவிகளிடம் கௌதமர் உபதேசம் கேட்டார். அவர்களது போதனைகள் சரியானவையாக அவருக்குத் தோன்றவில்லை. கற்பனைவாதிகளின் முடிவற்ற வாதப் பிரதிவாதங்களால் உலகின் துன்பங்களைத் தீர்க்க முடியாது என்று அவர் கருதினர். பின்னர் கௌதமர், உருவேலா என்ற எழில் வனம் சென்றார். அங்கு கடும் விரதங்களையும் நோன்புகளையும் அனுஷ்டித்துத் தவம் புரிந்தார். இதனால் உடல் மெலிந்து உள்ளமும் சோர்ந்தது. தவத்தின் போது அவர் பல முறை மரணத்தின் வாயிலை அடைந்தார்; ஆனால் வாழ்க்கைப் புதிருக்கு விளக்கம் கிடைக்கவில்லை. ஆகவே இவ்வழியைக் கைவிட்டு, ஆத்மிகத் தியானத்தில் இறங்க அவர் தீர்மானித்தார். இச்சமயம் மாரன், சபலமும் பயமும் காட்டி அவரை வழிமாற்ற முயன்றான் என ஒரு கதை உண்டு. கௌதமரின் மனதில் நடந்த போராட்டத்தையே இது காட்டுகிறது. அவர் தளராது தியானம் செய்து பூரண தன்னடக்கத்தையும் மனத் தெளிவையும் பெற்றார். மாறி மாறி வெவ்வேறு பிறப்பு எடுக்கும் பலதரப்பட்ட ஜீவராசிகளைக் கொண்ட பிரபஞ்சம் முழுதையும் ஒரே நியதியாக அவர் கண்டார். கௌதமர் ஞானோதயம் பெற்றவர் ஆகிவிட்டார், ''புத்தர்'' ஆகிவிட்டார்.

''புத்தர்''

தாம் கண்ட ஞானத்தை அவர் பிறருக்கு உபதேசித்தார். உபதேசம் செய்வது எளிது, ஆனால் அவர் அதோடு நிற்கவில்லை. மற்ற மனிதர்கள் எவ்வாறு வாழவேண்டும் என உபதேசித்

தாரோ, அதே வாழ்க்கையைத் தாமும் வாழ்ந்து காட்டினுர்.

**உபதேசம்**

நாற்பத்தி ஐந்து வருஷ காலம் அவர் பற்பல இடங்களுக்குச் சென்று உபதேசம் புரிந்தார். பிராமணர் முதல் பஞ்சமர் வரை, சீமாட்டிகள் முதல் பச்சாத்தாபப்பட்ட பாபிகள் வரை ஏராள மான சீடர்கள் அவருக்குச் சேர்ந்தனர். அவர்களில் முக்கிய மானவர் ஆனந்தர். சீடர்களுக்குப் போதனை செய்வதும், சங் கத்தை அமைப்பதுவுமே புத்தரது பிரதான அலுவல்களாக இருந்தன.

அவர் சீடர்களையும் பல இடங்களுக்கு அனுப்பிப் பிர சாரம் செய்யச் சொன்னுர். "பலரது நன்மைக்காக, பலரது க்ஷேமத்துக்காக, உலகின்பால் கருணையினுலே, நன்மைக்காக, கடவுளர்-மனிதர்களின் க்ஷேமத்துக்காக, பிக்ஷுக்களே நீங்கள் புறப்பட்டுச் சென்று அலைந்து திரியுங்கள். உங்களில் இருவ ஒரே வழியில் செல்லக் கூடாது. ஆரம்பத்தில் பெருமை வாய்ந் ததும், அந்தத்தில் பெருமை வாய்ந்ததும், மையத்தில் பெருமை வாய்ந்ததுமான சித்தாந்தத்தை உபதேசியுங்கள். உள்ளும் புறமும் நிறைவான, பூரணமான, பரிசுத்தமான, சிரேஷ்டமான வாழ்க்கையைப் பறைசாற்றுங்கள்" என்று அவர் சீடர்களிடம் கூறினுர்.

அவரது உபதேசங்களில் காணப்படும் பகுத்தறிவு வாதம் நம்மைக் கவர்கிறது. சரியான கருத்துகளும், பகுத்தறிவுக் கண்ணேட்டமே அவரது நல்வழிக்கு முதல்படியாக அமைந் துள்ளன. கடவுளை நேரடியாக அறிந்தவர்கள் போலப் பலர்

**பகுத்தறிவு**

அக்காலத்தில் பேசிவந்தனர். இவர்கள் கடவுளை நேருக்கு நேர் பார்த்ததில்லை என்று புத்தர் குறிப்பிட்டார். பெண் யார் என்று தெரியாமலே காதலிப்பவனையும்; மாளிகையை எங்கே கட்டுவது என்று தெரியாமலே மாடிப்படியைக் கட்டுபவனையும், நதியைக் கடப் பதற்காக எதிர்க்கரையைத் தன் அருகே வரச்சொல்பவனையும் இவர்களுக்கு அவர் ஒப்பிட்டார். துவேஷமும் வெறுப்பும் அடி

யோடு ஒழிந்து, பூரண அன்பு நிலவும் மனோநிலைதான் ஈசுவர சாமீப நிலை என்ற புத்தர் விளக்கினார்.

போதகரிடம் உள்ள மரியாதைக்காக அவர் சொல்வதை எல்லாம் ஏற்கக் கூடாது என்றும்; வாழ்க்கையை ஒட்டி, தர்க்க ரீதியாகப் பரீட்சித்தே ஏற்க வேண்டும் என்றும் சீடர்களுக்கு அவர் உபதேசித்தார். தம்மையும் இவ்வாறே எடை போடுமாறு அவர் கேட்டுக்கொண்டார். ''நீங்கள் பராபரியாகக் கேட்பதை ஒப்புக்கொள்ளாதீர். மாமூலானது என்பதற்காக ஒப்புக்கொள்ளாதீர். 'அது அப்படிதான் இருக்க வேண்டும்' என்று அவசரப் பட்டு தீர்மானிக்காதீர். நமது சாஸ்திரங்களில் காணப்படுகிறது என்பதற்காகவோ; 'இது ஏற்கத்தக்கது' என்ற ஊகத்தினாலோ; உங்கள் ஆசாரியன் உபதேசித்தது என்பதற்காகவோ ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளாதீர்'' என்று புத்தர் கூறினார்.

தங்களிடம் இரகசிய உண்மைகள் இருப்பதாக வேஷம் போடுவோரைப் புத்தர் துச்சமாகக் கருதினார். அறிவால் அறியக் கூடிய உண்மை, மந்திர உபதேசத்தால் அறியக் கூடிய உண்மை என்ற பேதம் இன்றி, தாம் சத்தியத்தை உபதேசித்திருப்பதாகவும்; தாம் எதையும் ஒளித்து வைத்துக்கொள்ள வில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். ஒவ்வொருவரும் தம் அந்தராத்மாவையே, சத்தியத்தையே துணையாகக் கொள்ள வேண்டும் என்றும்; வேறு வெளித் துணையை நாடக் கூடாது என்றும் அவர் கூறினார். சாஸ்திரத்தை ஏற்றுச் சத்திய சோதனையை நிறுத்திவிடக் கூடாது.

புத்தர் போதனையில் குறுகிய கோட்பாடு எதுவும் கிடையாது. குணதோஷ விமர்சனத்தை அவர் தடுக்கவே யில்லை. சகிப்பின்மையே மதத்தின் மாபெரும் விரோதி என்று அவர் கருதினார். பல வகைப்பட்ட கருத்துகளையும் அலசி ஆராய்ந்து,

சகிப்பு

பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கையைப் புனர்நிர்மாணம் செய்துகொள்ள மனிதர்களுக்கு உதவ வேண்டும். உலகின் குழப்பத்தையும் ஊதாரித்தனத்தையும் சரிப்படுத்த இதுவே வழி என்று அவர்

நம்பினார். பிற மதங்களைத் தூஷிப்பதை அவர் பின்வருமாறு கண்டித்தார்: ''ஒருவன் அண்ணாந்து பார்த்து வானத்தை நோக்கித் துப்புவது போன்றது இது. அந்த எச்சில் வானைக் களங்கப்படுத்துவதில்லை; கீழே திரும்பி வந்து அவனுடைய உடம்பையே அசுத்தப்படுத்துகிறது.''

ஒரு முறை கூட புத்தர் சினந்து கனன்றதில்லை. ஒரு சமயம் கூட கருணையற்ற வார்த்தையை அவர் மொழிந்ததில்லை. அஞ்ஞான உலகம் என்று நினைத்தாரே தவிர, கெட்ட உலகம் என்று அவர் நினைத்ததில்லை. எதிர்ப்புகளை அமைதியுடனும் நம்பிக்கையுடனும் அவர் சமாளித்தார். ஒரு சமயம் ஒரு கிருஹஸ்தன் புத்தரைத் திட்டி நொறுக்கினான். ''நண்பரே, ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு கிருஹஸ்தர் உணவு படைக்கிறார். அந்த உணவைக் ஏற்றுக் கொள்ளப் பிச்சைக்காரன் மறுத்தால், அந்த உணவு யாரைச் சேரும்?'' என்று அவனிடம் புத்தர் கேட்டார். ''ஏன், அந்த கிருஹஸ்தரைத்தான் சேரும்'', என்று அவன் பதிலளித்தான். ''அப்படியானால், உமது வசவையும் துவேஷத்தையும் நான் ஏற்றுக்கொள்ள மறுத்தால், அது உம்மிடமே திரும்பி வந்துவிடும் அல்லவா? ஆனால் ஒரு நண்பரை இழந்து நான் வறியனாகப் போக வேண்டியிருக்கிறது!'' என்று புத்தர் பதிலளித்தார். நிர்ப்பந்தமாக ஒருவரை மாற்றுவது என்பது புத்தரிடம் அறவே கிடையாது. அவருடைய முறையின் அடிப்படையானது, அனுஷ்டானமே தவிர நம்பிக்கை அல்ல. மத மாற்றங்களில் புத்தருக்குச் சிரத்தை இல்லை. ஒரு சமயம் ஒரு பிராமணனின் ஹோம குண்டத்தின் அருகே அமர்ந்து, புத்தர் தம் கருத்துகளை விளக்கினார். ஆனால் அந்தப் பிராமணின் தொழுகை முறையை அவர் கண்டிக்கவேயில்லை.

மாபெரும் தர்ம வீரரான புத்தர் மடாலயக் கட்டுப்பாடு சம்பந்தமான அற்ப விஷயங்களையும் கவனிக்க வேண்டியிருந்தது. புத்தரின் உறவினனான தேவதத்தன் அவரைக் கவிழ்த்துவிட்டுத் தலைமையைக் கைப்பற்றச் சதி செய்தான்.

சங்கம்

ஆனால் அவனுக்கு மன்னிப்பே கிடைத்தது. மற்றொரு தருணத்தில், வயிற்றுப் போக்கினால் கஷ்டப் பட்ட ஒரு பிக்ஷு, மலத்திலேயே படுத்துக்

டைந்தார். புத்தர் தமது அணுக்கச் சீடர் ஆனந்தர் உதவியுடன் அந்தப் பிக்ஷுவை நீராட்டி, வேறு படுக்கையில் படுக்க வைத்தார். தம்மைப் போலவே அந்த நோயாளியையும் கருதிச் சிகிச்சை செய்யு மாறு மற்ற பிக்ஷுக்களைப் புத்தர் கேட்டுக்கொண்டார். பௌத்த சங்கத்தில் ஜாதி பேதங்களுக்கு இடமில்லை. கடலில் சங்கமம் ஆகும் பல்வேறு நதிகள் தங்கள் முந்திய பெயர்களையும் தன்மை யையும் இழப்பது போல, பௌத்த சங்கத்தில் சேர்பவர்களும் முந்திய ஜாதியையும் பெயர்களையும் இழக்கிறார்கள் என்று புத்தர் போதித்தார். பெண்களும் புனித நிலையை அடைய முடியும் என்று புத்தர் கூறினார். ஆனால் அவர்களைச் சங்கத்தில் சேர்ப்பதற்கு மிகவும் தயங்கினார். ஆனந்தர் பெருமுயற்சி செய்து பெண்களைச் சங்கத்தில் சேர்க்கக் குருநாதரின் அனுமதியைப் பெற்றார். பெண்களைச் சங்கத்தில் அனுமதித்திராவிடில் புனித மதம் ஆயிரம் ஆண்டுகள் நீடித்திருக்கும் என்றும்; பெண்களை அனுமதித்ததால் அது ஐநூறு ஆண்டுகளே நிலைத்திருக்கும் என்றும் புத்தர் குறிப்பிட்டாராம். சங்க விதிகளை அவர் நிர்ணயித் திருந்தார். ஆனால் தம் காலத்துக்குப் பிறகு, சங்கம் விரும்பினால், முக்கியமற்ற விதிகளைக் கைவிட அவர் அனுமதித்தார்.

எண்பதாவது வயதுவரை அலைந்து திரிந்து, உழைத்து புத்தர் அயர்ந்து போய்விட்டார். காசிக்கு 120 மைல் வடகிழக்கே உள்ள குசிநகரத்தின் அருகே ஒரு கிராமத்தில் கி. மு. 483-வது ஆண்டில் அவர் காலமானார். ஏதன்ஸ் நகர வைதிக மதத்தை

**முடிவு**

எதிர்த்த கிரேக்க ஞானி சாக்ரட்டீஸும், யூத மதத்தை எதிர்த்த ஏசுநாதரும் பிராணத்தியாகம் செய்ய நேர்ந்தது. ஆனால் வேத வைதிகத்தையும் சடங்குகளையும் அவர்களைவிடத் தீவிரமாக எதிர்த்த புத்தர், எண்பது வயதுவரை வாழ்ந்து, ஏராளமான சீடர்களைப் பெற்று, தம் ஆயுள் காலத்திலேயே ஒரு மத ஸ்தாபனத்தையும் உருவாக்கினார். பின்னர் அவர் சாந்தி யுடன் காலமானார். வைதிகத்தை எதிர்த்த இவர்கள் மூவரும் வெவ்வேறு விதமாக நடத்தப்பட்டதற்கு மதம் சம்பந்தமான இந்தியாவின் மனப்பான்மையே காரணம் போலும்.

# 2. போதனைகள்

சார்நாத் என்ற ஊரில் இருந்த மான் வனத்தில் புத்தர் முதன் முதலாக உபதேசித்தார். அந்த உபதேசத்தின் வாசகம் வழிவழியாக வந்து நமக்குக் கிடைத்திருக்கிறது. அதில் உள்ள சொற்களும் கருத்துக்களும் புத்தருடையவையே என்பதைச் சந்தேகிப்பதற்கு யாதொரு காரணமும் இல்லை.

அந்தப் போதனை மிகவும் எளிமையானது. மத வாழ்வு வாழ விரும்புவோர் புலன் நுகர்ச்சியிலோ, கொடிய விரதங்களிலோ அழுந்தாமல், இரண்டுக்கும் மையமான மார்க்கத்தில் செல்ல வேண்டும் என்று புத்தர் முதலில் கூறுகிறார். பின்னர் துக்கம், துக்க காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்ற நான்கு பேருண்மைகளை அவர் விவரிக்கிறார்.

**1. துக்கம்**

''பிறவி துக்கம், மூப்பு துக்கம், பிணி, துக்கம், சாக்காடு துக்கம்...நமக்குப் பிடிக்காத விஷயங்களுடன் பிணைபட்டிருப்பது, நமக்குப் பிடித்த விஷயங்களிலிருந்து பிரிந்து இருப்பது ஆகியவையும் துக்கமே. ஒருவன் விரும்புவதைப் பெறுது இருப்பதுவும் துக்கமே.'' பிறப்பு, இறப்பு, துன்பம், அன்பு ஆகியவை உலகெங்கும் காணப்படும் விஷயங்கள். இசைவு அற்ற, ஸ்ருதி பேத நிலையைக் காட்டும் அறிகுறிகள் அவை. முரண்பாடே மனிதனின் துன்பத்துக்கு ஆணிவேர், அவனது ஆத்மிகப் பிணி. நிலையற்ற ஜீவராசிகள் அனைத்திலும் இது பரவிப்படர்ந்து நிற்கிறது. இதிலிருந்து தப்ப வழி காண முடியும், காணவேண்டும்.

**2. காரணம்**

ஒவ்வொன்றுக்கும் காரணம் உண்டு; காரணத்துக்கு விளைவு உண்டு. பிரபஞ்சம் முழுதையும் ; கடவுளரையும் மாந்தரையும் ; சுவர்க்கத்தையும் பூமியையும் இந்த எளிய தத்துவமே நடத்துகிறது. மனித வாழ்க்கைச் சம்பவங்களையும் சரித்திர நிகழ்ச்சிகளையும் கூட இதுவே நடத்துகிறது. துக்கத்தின் காரணத்தைக் கண்டுபிடித்து ஒழித்தால், துக்கமும் மறைந்து விடும். வாழும் ஆசையே இந்தக் காரணம். அறியாமையின் விளைவே ஆசை. அறியாமை எழுந்தால்

பிரபஞ்சத்தின் வாழ்வுடன் பிணக்கு ஏற்படுகிறது, வாழ்வின் ஒருமை சிதைகிறது. தனித்தன்மையை மிகைப்படுத்துதல், தன்னை ஒதுக்கிக் கொள்ளல், உலக ஸ்ருதியுடன் ஒத்திசைய மறுப்பது ஆகியவை விளைகின்றன. ஆசைகளும் ஏக்கங்களும் எழுந்து, ஆன்மாவைச் சித்திரவதை செய்து, அதை அடிமைப்படுத்துகின்றன. இந்தத் தளைகளை அறுத்து விடுதலை பெற ஆன்மா துடிக்கிறது. அறியாமையை உள்ளுணர்வு ஒழிக்கும்; ஆசையை ஒழுக்க முயற்சி ஒழிக்கும்.

**கர்மம்**

கர்மம், மறுபிறவி என்ற கோட்பாடுகளைப் புத்தர் ஏற்றுக் கொள்கிறார். ஒருவன் என்ன கர்மம் (செயல்) புரிகிறானோ, அதே கர்மமாக ஆகிவிடுகிறான். நமது ஒழுக்க உலகை நல்லதாகவோ தீயதாகவோ நாமே சதா உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு சிந்தனையும், உணர்ச்சியும், விருப்பமும் நமது சொந்தப் பரிணாமத்துக்கு ஓரளவு காரணமாகிறது. மனித இனம் சதா தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. எல்லையற்ற தர்ம நியதியின் (அறநெறி) ஆதிக்கத்துக்கு உட்பட்டதே வாழ்வு என்று புத்தர் கருதுகிறார். நமது செயல்களின் விளைவுகளிலிருந்து நாம் தப்பவே முடியாது. பிணி, நஷ்டம், தோல்வி, ஏமாற்றம், பாசத்தின் வடுக்கள், காரிய விரயம் முதலிய எல்லாத் துன்பங்களுக்கும் தார்மிக முக்கியத்துவம் உண்டு; அவை தார்மிக ரீதியான காரண-காரியத் தொடர்பு உள்ளவை. தன்னலத்துக்குத் தண்டனையும், தன்னலமற்ற வாழ்க்கைக்கு மனச்சாந்தி என்ற வெகுமதியும் உண்டு என்றும்; நாம் செய்தது என்ன என்பதை உணர வேண்டிய நிர்ப்பந்தம் வரும் என்றும் புத்தர் உறுதியாக நம்பினார். ''என் கருமமே என் உடைமை; என் கருமமே என் பிதிரார்ஜிதம்; என் கருமமே என்னைத் தாங்கும் கருக்குழி; என் கருமமே என் இனம்; என் கருமமே எனக்குப் புகலிடம்,'' என்பது அவர் வாக்கு.

இந்தத் தர்ம நியதியின் ஆளுகையானது நிரந்தர நரகம் என்ற பயங்கரத்தை நீக்குகிறது என்பது ஆறுதல் தரும் விஷய

மாகும். எந்த நரகக் குழியும் நிரந்தரமாக இருக்க முடியாது.

தர்மம்

சுவர்க்கமும் நரகமும் ஆதி அந்தம் உள்ளவை, அநித்தியமானவை. அவற்றுக்கு முடிவு உண்டு; அவை எப்போது முடியும் என்பது நம்மையே பொறுத்திருக்கிறது. ஒவ்வொரு தீய உணர்ச்சியையும் இனியதாக மாற்றுவற்கும்; ஒவ்வொரு கீழ்த்தர எண்ணத்தையும் ஒடுக்குவதற்கும்; தாழ்வுபடுத்தும் ஒவ்வொரு சபலத்தையும் அடக்குவதற்கும் இம்முயற்சியில் முக்கியத்துவம் உண்டு. ஆனால் வறுமை அல்லது துன்பத்தைப் பற்றி நமக்கு அக்கறை வேண்டாம் என்றும், அவரவருக்கு விதித்ததே கிடைக்கும் என்றும் நாம் நினைக்கக் கூடாது. அவ்வாறு நினைப்பது ஜீவராசிகளின் சகோதர பாவத்துக்கு முரணானது. அவ்வாறு நினைப்பவனைத் தர்ம நியதி கடுமையாகத் தண்டிக்கும். ஏனெனில் அதன் மன்னிப்புக்கும் இரக்கத்துக்கும் அவன் தன்னைப் பாத்திரமாக்கிக் கொள்வதில்லை. எந்தத் தனிப்பட்ட தெய்வத்தின் குறுக்கீடும் அந்த நியதி இயங்குவதற்குக் காரணம் அல்ல; தெய்வ அநீதி அல்லது யதேச்சாதிகாரத் திருவிளையாடலுக்கு இடமில்லை.

சிந்தனைகள், ஆசைகள், பாசங்கள், உணர்ச்சிகள் ஆகியவற்றின் கோவையே ஒருவனது அகவாழ்வு. இவற்றையெல்லாம் பிணைத்து நிற்கும் தேகம் என்ற கயிறானது மரணத்தின் போது

மறு பிறவி

இற்று விழுந்ததும் கட்புலனுக்குத் தெரியாத அந்தக் குணங்கள் எல்லாம் வேறு ஒரு நபரைத் தோற்றுவிக்கின்றன. மாண்டவனின் தொடர்ச்சியாக, அவன் சேகரித்து வைத்த வினைகளை இந்தப் புதுமனிதன் அனுபவிக்கிறான். ஸ்தூல மனிதனை உருவாக்கும் பஞ்ச பூதங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன; ஆனால் அவை பிரிந்து கலைவதில்லை. அவற்றைப் பிணைத்து வைத்து, மீண்டும் மீண்டும் பிறப்பிக்கும் சக்தியை—அதாவது ஆசையை, தான் எனத் தனித்து வாழும் ஆசையை—அவிக்கும் வரை அவை கலைந்து சிதறமாட்டா.

அறியாமையை அகற்ற மாசற்ற சீலம், நல்லொழுக்கம் அவசியம். சீலமும் உள்ளுணர்வும் (பிரக்ஞையும்) பிணைப்

புள்ளவை. நியதிகள், சம்பிரதாயங்கள், சட்டங்கள், சடங்குகள் பற்றிப் புத்தர் பேசவில்லை. நல்ல இதயமும், நல்ல மனதும் கொண்டிருந்தால் நற்கருமங்களைப் புரிந்து இன்பம் அடையலாம். நல்லுணர்ச்சியும் நற்கருமமே அவரது மதத்தின் அடிப்படை. பூரண வாழ்வுக்குத் தெய்வம் அல்லது வேறு புறச் சக்திகளுடன் சம்பந்தம் இருப்பதாக அவர் கருதவில்லை. மனிதனுக்கு நன்மையும் தின்மையும் ஏற்படுவது அவனது சொந்தச் சக்திக்கு உட்பட்டதே என்று அவர் போதிக்கிறார். ''வாருங்கள் சீடர்களே, துன்பத்தை ஒழிக்கப் புனித வாழ்க்கை நடத்துங்கள்,'' என்று அவர் அழைக்கிறார். அவர் காட்டியுள்ள அஷ்டாங்க மார்க்கம் (எட்டு வழிகள்) பூரணத்வம் அடைவதற்கான ஒரு ஏணியே. நல்லறிவு, நல்ல நோக்கங்கள், நல்லுரை, நற்கருமம், நல்வாழ்வு, நன்முயற்சி, நல்ல மனநிலை, நல்ல தியானம் ஆகியவையே இந்த எண் வழிகள்.

**3. எண் வழி**

நல்ல திருஷ்டியே, நல்லறிவே முதற்படி. நான்கு பேருண்மைகளை அறிவதே நல்லறிவு. இந்த உண்மைகளைப் புத்திபூர்வமாக மாத்திரம் அறிந்தால் போதாது. ஒவ்வொரு மனிதனும் ஆத்மபூர்வமாக இவற்றை ஆராய்ந்து, தானே கண்டுபிடித்து, எடைபோட்டுப் பார்க்க வேண்டும். ஏதோ அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும் விஷயம் அல்ல இது. சுபாவத்தையே அடியோடு மாற்றி, ஆத்மாவின் ஆழத்தையே பாதிக்கும் விஷயம் இது. நல்ல நோக்கங்கள் என்ற இரண்டாவது படியில் இது கொண்டுவிடுகிறது. துறவு, தயாளம், கருணை என்பவையே நல்ல நோக்கங்கள். இன்பங்களைத் துறக்கவும், துவேஷத்தை ஒழிக்கவும், தீமை செய்யாமல் இருக்கவும் உறுதிபூணும் நிலை இது.

பொய் மொழிதல், அவதூறு சொல்லுதல், திட்டுதல், கடும் வார்த்தைகளை உபயோகித்தல், வீண் பேச்சு ஆகியவற்றைத் தவிர்ப்பதே நல்லுரையாகும். கொல்லாமை, திருடாமை, புலனுகர்ச்சியில் அழுந்தாமை ஆகியவையே நற்கருமம். ஆயுத வியாபாரி, அடிமை வியாபாரி, கசாப்பு வியாபாரி, பொது விடுதி நடத்துபவன், பாஷாண வியாபாரி என்ற தடுக்கப்பட்ட பிரவிருத்திகளை மேற்கொள்ளாமையே

Q4
N58

நல்வாழ்வாகும். தமது பிக்ஷுக்கள் எச்சமயத்திலும் சிப்பாய்கள் ஆகக்கூடாது என்று புத்தர் விதித்தார். இந்த அஷ்ட மார்க்கம் வெறும் ஒழுக்கக் கோட்பாடு மாத்திரம் அல்ல; அது ஒரு வாழ்க்கை முறையும் ஆகும்.

தீய மனநிலைகள் எழுவதை ஒடுக்குதல், ஏற்கெனவே எழுந்துள்ள தீய நிலைகளை ஒழித்தல், நல்ல மன நிலைகளைத் தூண்டுதல், ஏற்கெனவே உள்ள நல்ல நிலைகளைப் பூரணமாக்குதல் ஆகியவை நல்முயற்சி எனப்படும். மனத்தைப் பண்படுத்துவதன் ஆரம்பம் அது. தன்னைத் தானே கண்காணிப்பதன் மூலம் மனித மனம் என்ற பாதாள லோகத்தைக் கட்டுப்படுத்தவும்; மனதுக்கும், ஆன்மாவுக்கும், தேகத்துக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தவும் முடியும். ஒரு மனிதன் மற்றவர்களை மாத்திரம் ஏமாற்றுவது இல்லை; தன்னையும் ஏமாற்றிக் கொள்கிறான். நாம் பெரும்பாலும் இயந்திரங்கள் போல வாழ்கிறோம். நமது எண்ணங்களும் உணர்ச்சிகளும் பழக்கம் என்ற தடத்தில் செல்கின்றன. ஆத்ம பரிசோதனை மூலம் இந்த யாந்திரீகப் போக்கை ஒழித்து, ஆத்மாவை அறிய நாம் முயல்கிறோம். சோம்பலும் சோர்வும், தீய ஆசைகளைப் போலவே, ஆன்மிக வளர்ச்சிக்கு ஊறு, செய்பவை. நல்ல மனோ நிலை என்ற மார்க்கத்தின் மூலம் தேகத்தையும் ஆன்மாவையும் கண்காணித்து, பரபரப்பையும் சோர்வையும் அடக்கி, தன்னடக்கத்தையும் விழிப்பான மனதையும் பெறவேண்டும். தன்னையறிவதன் மூலம் இயந்திர கதியிலோ அலட்சியமாகவோ செயலாற்றுவதைத் தவிர்த்து, தன்னைத்தானே வெல்லும் நிலை அது. சிரஞ்சீவித்வக் கண்ணோட்டத்துடன் விஷயங்களைக் காணும் நிலை அது.

அடுத்தபடி, நல்ல தியானம். இதில் நான்கு விதத் தியானங்கள் உண்டு. ஆசையை அடக்கிச் செயல் புரியாமல் இருப்பதே நல்வாழ்வு எனப் புத்தர் போதித்ததாக ஒரு விசித்திரக் கருத்து நிலவுகிறது. சத்தியத்தை அறியவேண்டும் என்ற உறுதி, அதற்கான முயற்சிகளைச் செய்தல், வாழ்க்கையில் நல்லதையே அப்யசித்தல்,

தியானம்

இடையறாது சபலங்களை ஒடுக்கி மன உறுதி இம்மியும் தளராது

59714

இருத்தல்—இவை யெல்லாம் மனிதன் தீரமான பிரயத்தனங்கள் செய்யவும், வீர சாகசங்களைப் புரியவும் வல்லவன் என்ற நிச்சயத்தை ஆதாரமாகக் கொண்டவையே. தியானம் என்பது ஒருமுகமான கவனம் செலுத்துவதாகும். தீவிர முயற்சியே அது ; சங்கற்பத்தையும் சிந்தனையையும் ஒன்றிக் கலக்கவைக்கும் ஏகாக்கிர நிலையே அது. செயலற்ற விழிதுயில் நிலையல்ல அது. ஒவ்வொருவனும் தானாகவே, தனது சங்கற்பத்தின் மூலமே, கதிமோட்சம் தேட வேண்டும் என்பது புத்தரின் போதனை. இத்தகைய பிரம்மாண்ட முயற்சியில் ஈடுபட ஒவ்வொருவனுக்கும் பிரம்மாண்ட சங்கற்பம் வேண்டும். அத்யாத்மிக அனுபவத்தை முயன்று பெற வேண்டும். முற்றிலும் வரப்பிரசாதமாக அது கிடைக்காது. அத்யாத்மவாதி திறந்த மனத்தினனே தவிர வெறுமை மனத்தினன் அல்ல. கடுமையான கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கையையே அவன் நடத்துகிறான்.

சிகரம்

அஷ்ட மார்க்கத்தின் முடிவாக, சிகரமாக விளங்குகிறது நல்ல தியானம். மனச் சேஷ்டைகளும் புலன் சேஷ்டைகளும் அடங்கி, சிந்தனை சிதறுவது நிற்கும் போது, ஆன்மா அதி உன்னதமான, அதி தூய்மையான நிலையை அடைந்து, தனது இயல்புக்கு உகந்த கலப்பற்ற ஆனந்தத்தை அனுபவிக்கிறது. அறியாமையும் ஆசையும் மறைந்து, தீர்க்க திருஷ்டியும் புனிதமும் தோன்றுவதால் கிடைக்கும் அதி உன்னத வாழ்வின் சாரமே இந்த நிலை. எல்லையற்ற சுதந்திரத்தையும் அறிவையும் நெருங்கி அனுபவிக்கும் நிலை அது.

அகர்மம் ?

பிக்ஷுக்களுக்கும் இல்லறத்தாருக்கும் அனுஷ்டான சாத்தியமான முறைகளைப் புத்தர் அளிக்கிறார். இல்லறத்தாருக்கு அவர் போதிக்கும் ஐந்து ஒழுக்க விதிகள் வருமாறு :—கொல்லாமை, திருடாமை, புலனுகர்ச்சியில் அழுந்தாமை, பொய்யாமை, லாகிரி வஸ்துக்களைத் தவிர்த்தல் ஆகியவை. செயல் புரியாமல் இருக்க வேண்டும் என்று அவர் கூறவில்லை. அகர்ம (சும்மா இருக்கும்) சித்தாந்தத்தை அவர் போதிக்கிறாரா என்று ஒரு ஜைன கிருஹஸ்தன் கேட்டபோது புத்தர் சொல்லுகிறார் : ''செயலற்று இருக்கும்

தத்துவத்தைத் துறவி கௌதமன் கடைப்பிடிப்பதாக என்னை பற்றி யார்தான் சொல்ல முடியும்? மனோவாக்குகாய ரீதியாகத் தீமை செய்யக்கூடாது என்று நான் பறைசாற்றுகிறேன். பல்வேறு தீய காரியங்களைச் செய்யக்கூடாது என்று பறைசாற்றுகிறேன்.... மனோவாக்குகாய ரீதியாகப் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று பறைசாற்றுகிறேன்.''

புத்தரின் ஒழுக்கக் கோட்பாட்டில் நற்காரியங்களைவிட அன்பே முக்கியமானது. ''இதயத்தை விடுதலை செய்யும் அன்பில் மாகாணிப்பங்கு கூடப் பெறமாட்டா எத்தகைய நற்சருமங்களும். இதயத்தை விடுதலை செய்யும் அன்பில் அடங்கியவையே அவை (அக்கருமங்கள்). அது ஜ்வலிக்கிறது, ஒளி தருகிறது, ஜோதி வீசுகிறது.'' ''தாய் தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் தனது ஒரே குழந்தையைக் கண்காணிப்பது போல, ஒவ்வொருவரும் எல்லா ஜீவராசிகளையும் நேசிக்க, எல்லையற்ற அன்பை வளர்க்க வேண்டும்.'' பிற உயிர்களைப் போற்றுதல், ஒழுக்கத்தின் முக்கிய அம்சமாகும். நல்ல பௌத்தன் எவனும் தன் மகிழ்ச்சிக்காக மிருகங்களைக் கொல்வதோ, புலால் உண்பதோ இல்லை. அவனுடைய பணிவுள்ள சோதரர்கள் அவை. தெய்விக உரிமையுடன் அவன் மேலாதிக்கம் செலுத்துவதற்கான மட்டமான ஐந்துக்கள் அல்ல அவை. உன்னத உணர்வும் உயிர்களிடத்து அன்பும் வேண்டும் என்பது புத்தரின் கட்டளை. பாபத்தைப் பற்றி அவர் பிரஸ்தாபிக்கவில்லை; அறியாமையைப் பற்றியே பிரஸ்தாபிக்கிறார். அனுதாபத்தாலும் ஞானத்தாலும் அறியாமையைக் குணப்படுத்த முடியும்.

அன்பு

ஒருவன் அறியாமையை வென்று, பாபபரிகாரம் கேட்கும் கர்மங்களின் சக்தியை முறியடித்து, ஆசையையும் ஏக்கத்தையும் ஒழித்து, ஞானம் பெறும் போது, வாழும் உலகிலிருந்து உயிர் உலகத்துக்கு மாறுகிறான். உருவமும் அருவமும் அற்ற, நோவும் இன்பமும் அற்ற நிலை அது. அந்த நிலையை மனித உள்ளத்தால் உருவகப்படுத்த முடியாது. அதுவே பிறவிப் பிணியிலிருந்து விடுதலை, நிர்வாணம். அதன் தன்மையை விளக்கிச் சொல்ல புத்தர் மறுத்துவிட்டார். விளக்கு

4. நிர்வாணம்

வதில் பயனும், அர்த்தமும் இல்லை போலும். ஆனால் தமது வழியைக் கடைப்பிடிப்போருக்கு இவ்வாழ்விலேயே அந்தப் புனித நிலை கிடைக்கும் என அவர் வாக்களிக்கிறார். சடங்குகள், விரதங்கள், கடவுளர்கள் பற்றி அவர் பிரஸ்தாபிக்கவில்லை. தம்மை வழிபடுமாறு கூட அவர் கூறவில்லை. அவர் சத்தியத்தைக் கண்டு பிடித்தவர், சத்திய போதகர். ஒழுக்கக் கட்டுப்பாட்டில் மாத்திரமே அவரது உபதேசம் ஒருமுகமான கவனம் செலுத்துகிறது. அக்காலக் குதர்க்கவாதிகளுக்குப் போட்டியாக அவர் அத்யாத்மிகச் சர்ச்சைகளில் இறங்கவில்லை. உலகம் எல்லையற்ற பரவெளியா அல்லது எல்லை உள்ளதா ; அதற்கு ஆதி உண்டா இல்லையா ; சத்தியத்தை அடைந்தவனுக்குத் தனித்தன்மை உண்டா இல்லையா ; அவன் மரணத்துக்குப் பிறகும் வாழ்வானா, மாட்டானா—என்பவை பற்றி வாதிக்கப் புத்தர் முன்வரவில்லை.

புத்தரிடம் ஆகம சித்தாந்தங்கள் கிடையா. எக்காலமும் தம்மிடம் இருந்துவரும் விவேகத்துடன் தாம் பூமிக்கு வந்திருப்பதாக அவர் உரிமை கொண்டாடவில்லை. எண்ணற்ற பிறவிகளில் பொறுமையுடன் முயன்றே விவேகத்தைத் தாம் பெற்றதாக அவர் கூறுகிறார். தம் சீடர்களுக்கு ஆன்மிக வளர்ச்சிக்கான ஒரு திட்டத்தை அவர் தருகிறாரே தவிர, வழிகாட்டுகிறாரே தவிர, சித்தாந்தத்தைத் தரவில்லை. சத்திய சோதனையை நிறுத்தச் சித்தாந்தங்கள் சாக்குப் போக்காகிவிடும் என்பது அவருக்குத் தெரியும். சாட்சியம் எதிராக இல்லாமல், ஒரு சித்தாந்தம் எதிராக இருப்பதற்காக நாம் உண்மைகளை ஏற்க மறுப்பது சகஜம். ஞானம் பெற்றார் என்ற உண்மையிலிருந்து புத்தரின் போதனை தொடங்குகிறது. சொல்லுக்கு அடங்காத ஆத்மிக அனுபவமே அந்த ஞானம். இந்த அனுபவத்தையும், இதை அடைவதற்கான வழியையும் பற்றியதே அவரிடம் இருக்கக் கூடிய கோட்பாடு எல்லாம். முட்டைக்குள் இருக்கும் கோழிக்குஞ்சு வெளி உலகைப் பற்றிக் கற்பனை செய்து கொள்வது போலத்தான், அமரத்வம் பற்றிய நமது சித்தாந்தங்களும் என்று புத்தர் கூறுகிறார். சத்தியத்தை அறிய வேண்டும் என்றால் அதற்கான மார்க்கத்தைத் கடைப்பிடித்தால்தான் நடக்கும்.

புத்தர் இவ்விஷயத்தில் உலகின் மாபெரும் சிந்தனையாளர்களை ஒத்திருக்கிறார். இளைஞர்களைக் கெடுப்பதாகக் கிரேக்க ஞானி

சாக்ரட்டீஸ் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. தம்மிடம் சித்தாந்த எதுவும் இல்லை என்று இதற்குச் சாக்ரட்டீஸ் பதிலளித்தார். சித்தாந்தங்களை ஏசுநாதர் வெறுத்துத் தள்ளினார். சித்தாந்தங்களை அவர் போதிக்கவில்லை ; மத ஸ்தாபனத்தை அவர் நிறுவவில்லை. புதிய வாழ்க்கைப் பாதையைக் காட்டுவதே அவரது நோக்கம். சிலுவை ஒரு புதிய மதத்தின் சின்னமே தவிர ஒரு சித்தாந்தத்தின் சின்னம் அல்ல. சிலுவையைத் தாங்குவது சிட்சையின் நிபந்தனை. அதாவது தீமையை நன்மையால் வெல்லவேண்டும், மனப்பான்மை மாறவேண்டும், அகந்தையை ஒழிக்க வேண்டும் ; புகழ், பெருமை பற்றிய மண்ணுலக அளவுகோலைக் கைவிட வேண்டும்.

# 3. விமர்சனம்

புத்தர் எவ்வாறு சிந்தித்தார், அல்லது அவர் எவ்வாறு சிந்தித்தார் என அவரது ஆதிச் சீடர்கள் கருதினார்கள் என்பதை அறிய வேண்டுமானால், நாம் கி. மு. ஆறாவது நூற்றாண்டில் இந்தியா இருந்த நிலைமையைக் கற்பனை செய்து பார்க்க வேண்டும். மற்றவர்களைப் போலவே சிந்தனையாளர்களும் காலத்திலும் இடத்திலும் வேர் ஊன்றியவர்கள்தான். தங்கள் சகாப்தத்தின் சிந்தனைப் போக்குடன் மேதாவிகள் தங்கள் சிரஞ்சீவிச் சொந்தக் கருத்துகளைச் சேர்க்கிறார்கள். ஆனால் தாங்கள் வாழும் சகாப்தத்தை அடியோடு கடந்து நிற்க அவர்களால் முடியாது, கடந்து நிற்பதுவும் இல்லை. தங்கள் சககாலத்தவர்களின் கேள்விகளுக்கு விடை கூற அவர்கள் முயல்கிறார்கள். பரம்பரையாக வந்துள்ள கருத்துகளுடன் தொடர்புள்ள விடைகளையே அவர்கள் அளிக்கிறார்கள். அவர்கள் கூறும் விடைகளில் தீவிரப் புதுமை இருக்கலாம். ஆனால் பழைய அரைகுறைக் கருத்துகளையும் எண்ணங்களையும் உபயோகித்தே அவர்கள் தங்கள் புதிய, ஆழ்ந்த உண்மைகளை வகுக்கிறார்கள். பழைய கருத்துகளுக்குப் புது வியாக்கியானம் கூறுவதன் மூலம் அவர்கள் புதிய கருத்துகளை உருவாக்குகிறார்கள்.

அந்த சகாப்தம்

சரித்திர உணர்வு இல்லாதவர்கள் புத்தரை அபாரமாக ஏத்தியோ இறக்கியோ விமர்சனம் செய்கிறார்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கு நாடுகளில் பௌத்த மதக்

கருத்துகள் பரவின. அக்காலத்தில் விஞ்ஞானத்தாலும், லோகாயத ஞானத்தாலும் மேற்கு நாடுகளில் ஈசுவர சம்சய வாதம் பரவிப் படர்ந்திருந்தது. நிதர்சன வாதம், நாஸ்திகம், மனித நல வாதம் முதலியவற்றுக்கு மிகுந்த ஆதரவு இருந்து வந்தது. மனித இனத்தின் இன்பம், பெருமை, மனோ சக்தி ஆகியவற்றை நிலைநாட்டியவர் புத்தர் என்று மனித நல வாதிகள் போற்றுகிறார்கள். பரம்பொருளை அறிய முடியாது என்பவர்களும், அறிவதற்குப் பரம்பொருளே இல்லை என்பவர்களும் அவரது பெயரை உபயோகிக்கிறார்கள். எல்லாம் மனத்தின் சிருஷ்டிகளே என்று கருதும் அக்னேய வாதிகளும் புத்தரை உதாரணம் காட்டுகிறார்கள். சமூக லட்சிய வாதிகள், தார்மிக அத்யாத்மவாதிகள், பகுத்தறிவு வாதிகள் ஆகியோரும் தங்களுக்கு ஆதாரமாக அவரைக் குறிப்பிடுகிறார்கள். புத்தரின் போதனைக்கு நமது சகாப்தத்திலும் மிகுந்த முக்கியத்துவம் உண்டு. எனினும் அவர் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலையை அறியாமல் அவரது உபதேசத்தை நாம் சரிவரப் புரிந்து கொள்ளமுடியாது.

தவறான கருத்துகள்

முக்தி பெற அக்காலத்தில் நான்கு பிரதான மார்க்கங்கள் போதிக்கப்பட்டன : (1) பிரார்த்தனையும் வழிபாடுமே கடவுளின் அருளைப் பெறச் சிறந்த சாதனம் என்று வேதங்கள் கூறின. (2) யாகங்கள் செய்து கடவுளுக்கு ஆகுதிகள் கொடுக்கும் வழக்கம் அக்காலத்தில் பிரபலமாக இருந்தது. யாகம் மாத்திரம் போதாது என உபநிஷத்துகள் ஒப்புக்கொள்கின்றன. எனினும் இகத்தில் இன்பம் அடையவும், மோட்சத்தில் இடம் பெறவும் உபயோகமானது யாகம் என அனுமதிக்கப்பட்டது. (3) சில பிரிவினர் இடையே தவ முறை பிரபலமாக இருந்தது. குடியாமை, பிரம்மச்சரியம், ஏகாக்கிர சிந்தை ஆகியவற்றின் மூலம் சிந்தனை சக்தியையும் திடசங்கற்பத்தையும் அதிகரிக்கலாம். ஆனால் ஆசைகளை நிர்ப்பந்தமாக அடக்கியும், உடலை வருத்தியும் அதீத சக்திகளைப் பெறலாம் எனத் தபஸ் முறையினர் தவறாகக் கருதினர். கடவுளை அறிய யாகத்தை விடத் தவம் சிறந்தது என்று உபநிஷத் கூறுகிறது. (4) விவேகம், அதாவது தீர்க்க திருஷ்டியை, உபநிஷத்துகள் முக்கியமாகக் குறிப்பிடுகின்றன. ஆசையை அடக்குவது, உலக

நான்கு முறைகள்

...ல் பற்றிலாமை ஆகியவையும் விவேகத்துடன் சேர்ந்து ...இயங்க வேண்டும். இங்கு விவேகம் என்பது கல்வி ஞானத்தைக் குறிப்பிடவில்லை, ஒருமுகமான தியானத்தையே குறிப்பிடுகிறது. பரம்பொருளுடன் ஒருவன் தனது ஐக்கியத்தை உணரும் நிலை இது.

புலனுகர்ச்சியில் அழுந்துதல், தவம் செய்தல் என்ற இரண்டுக்கும் ''மையமான மார்க்கத்தை'' புத்தர் உபதேசிக்கிறார். அதாவது மேலே குறித்த கடைசி முறையை, தியானத்தை அவர் ஆதரிக்கிறார்.

**தெய்வம்**

அதிமானுஷ்ய சக்திகளில் சிரத்தை கொள்வதால் ஒழுக்க நியதிகளிலும், யதார்த்த நிலைமையை ஆராய்வதிலும் சிரத்தையோ சக்தியோ செலுத்த முடியாமல் போகிறது. தாங்கள் செய்யவேண்டிய காரியங்களை வேறு புறச்சக்திகள் செய்ய வேண்டும் என்று காத்திருக்கும் மனிதர்கள் தங்கள் சொந்தச் சக்திகளை உபயோகிப்பதே இல்லை என்பதைப் புத்தர் கண்டார். ஏதோ தெய்வீக மந்திரத்தால் தாங்கள் திடீரென உயர்ந்து விடலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். புறச்சக்தியை நாடுவது மனித முயற்சியைச் சரணாகதி செய்வதாக முடிகிறது. கடவுளர்கள் இருப்பதைப் புத்தர் மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் தேவதைகளே, ஜீவராசிகளில் ஒருவகையினரே, அவர்களும் போதம் பெறவேண்டியவர்களே என்று புத்தர் கருதினார்.

சித்தாந்தச் சர்ச்சைகளால் மன அமைதிக்கும் ஒழுக்க முயற்சிக்கும் தீங்கு ஏற்படும் என்று புத்தர் கருதினார். ஏனெனில் சித்தாந்தச் சர்ச்சையில் இறங்குவதன் மூலம், ஆழங்காணமுடியாத மர்மங்களில் சிக்குகிறோம். இந்த மர்மங்களைச் சிந்தனையால் அறிய முற்படக்கூடாது. ஆனால் இந்த மர்மங்கள் புத்தருக்குத் தெரியா என்றோ அவரை அக்னேயவாதி என்றோ கருதுவதற்கில்லை. சீடர்களுக்குப் போதித்ததை விட அதிகமான விஷயங்கள் தமக்குத் தெரியும் என்று பல இடங்களில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆத்மிகப் பிரச்னைகளுக்கு, உடன்பாடான அல்லது எதிர்மறையான விடை காணும் சிரமத்தை மேற்கொள்ள விரும்பாத சோம்பேறிச் சம்சயவாதம்

என்று புத்தரின் போதனையைக் கருதுவ... குத் தெரியவில்லை என்று ஒப்புக்கொள்... ...குத் தைரிய... இல்லையென்று கருதுவதும் தவறு.

**ஒரு உதாரணம்**

அத்யாத்மிகப் பிரச்னைகளுக்குப் புத்தர் இரண்டில் ஒன்று பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என மாலுங்கியபுட்டர் என்ற சீடர் மரியாதை வரம்பை மீறி அறைகூவுகிறார். இப்பிரச்னைகளுக்குத் தாம் பதில் சொல்ல முன்வரவில்லை என்று புத்தர் மிகுந்த மரியாதையுடன் குறிப்பிட்டுவிட்டு ஒரு கதையைச் சொல்கிறார்:—''ஒருவன் மீது விஷ அம்பு ஒன்று பாய்ந்துவிட்டது. அவனுடைய நண்பர்கள் வைத்தியரிடம் ஓடுகிறார்கள். காயத்திலிருந்து அம்பை வைத்தியர் உருவப் போகிறார். ஆனால் காயமடைந்த மனிதனே 'நிறுத்துங்கள்! அம்பை எய்தது யார்—ஒரு பெண்ணா, அல்லது பிராமணனா, அல்லது வைசியனா, அல்லது சூத்திரனா—, அவன் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன், அவன் நெட்டையானவனா, அல்லது குட்டையானவனா, அந்த அம்பு எந்த ரகத்தைச் சேர்ந்தது, அதன் இலட்சணங்கள் என்ன—முதலியவை எல்லாம் எனக்குத் தெரிந்தாலன்றி அம்பைப் பிடுங்க விட மாட்டேன்' என்று கத்துகிறான். என்ன நேரிடும்? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லுமுன் அந்த மனிதன் இறந்துவிடுவான். இதேபோல, அப்பாலுக்கு அப்பால் உள்ளவைகளை எல்லாம் பற்றிய தனது கேள்விகளுக்கு விடைகளை விரும்பிய சீடனும், துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பவை பற்றிய உண்மையை அறியுமுன் இறந்து விடுவான்.''

முற்றிலும் அனுஷ்டான சாத்தியமானதில்தான் புத்தருக்கு நாட்டம். தம் உபதேசத்தைக் கேட்போரைக் கற்பனை வாதத்தில் இறங்க அவர் தூண்ட வில்லை, ஒவ்வொருவரையும் தன்னைத் தானே அடக்கிக்கொள்வதில் ஈடுபடவே தூண்டுகிறார்.

6A
1-49